உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞூ வைகாசிமீ உ௩-உ வெள்ளிக்கிழமை (6-6-1975) [இல: க

சேக்கிழார் விழாவுக்கு

## ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகரின் சிறப்பு வருகை



அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் விழா யாழ். இந்துக்கல்லூரியில் வைகாசி 30, 31, (13, 14-6-75) நாட்களில் நடைபெறும். சிறப்புச் சொற்பெருக்காளராக தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணாமலை ஆதீன விரிவுரையரசு, மதுரையாதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பெரும் புலவர், "பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் தத்புருஷ தேசிகர் அவர்கள் கலந்து கொள்ளுகின்றார்கள்.

இவ் விழாவை அறிமுகப்படுத்தும் வகையில் இக் கட்டுரை வெளியாகின்றது. [ப—ர்.]

உண்மையை உணர்ந்த சித்தாந்த ஞானிகள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு. பலர் இல்லற ஞானிகளாய், உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியுடையவர்களாய் இறைவனோடே ஊடுவதும் உவப்பதுமாக வாழ்ந்து பேரின்பம் அநுபவித்தார்கள். "ஓடும் கவுந்தியுமே உறவென்றிட்டுள் கசிந்து - தேடும் பொருளும் சிவன் கழலே யெனத் தெளிந்து "வாழ்ந்த ஒப்பற்ற ஞானிகள் பாதமபட்ட நாடு தமிழ்நாடு. அத்தகைய சீரும் சிறப்பும் பொருந்திய தமிழகத்திலுள்ள தொண்டை நாடு செய்த தவம், தமிழ் நாடு செய்த தவம், ஞான நெறி நின்று வாழ்ந்த அறவோர் செய்த தவம், தமிழும் சைவமும் செய்த தவம். உலகம் செய்த தவம் ஆகிய எல்லாத் தவமும் ஒன்ருகத் திரண்டு உரு ஏற்ருற்போல் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன் தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரில் நாமெல்லாம் உய்ய அவதரித்தார் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள். எங்குமாய் எல்லாமாய்அவற்றிற்கு அப்பாலுமாய், பாலில்வெண்ணெய்போலவும் விறகிற் தீ போலவும் மறைந்து நின்று இயக்கும் ஒப்பற்ற சக்தியாகும் நடராசப் பெருமான் "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் புராணமாகும் பெரிய புராணத்தைப் பாடி முடித்தார் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள். செயற்கரிய செய்த பெரியோர்களின் சரிதங்களைக் கூறும் நூலே பெரிய புராணம. அவர் பாடிய 4286 செய்யுட்கள் தேன், சர்க்கரை, கற்கண்டு எல்லாம் ஒருங்கே கலந்தால் ஒத்து சுவைக்கும் இனிய செய்யுட்களாகும். "தெய்வம் மணக்கும் செய்யுட்களெல்லாம்" என்று இந் நூலைச் சுவைத்த மேதை கூறினர். கரிய கடலை நீந்தலாம். கடற்கரையின் மணலை எண்ணலாம், கடலில் வரும் திரைகளை எண்ணலாம், கடலிலுள்ள மீன்களை அளவிடலாம், ஆகாயத்தில் விளங்கும் நட்சத்திரங்களை எண்ணலாம் என்றும் திருத்தொண்டர் புராணத்தை அளவிடச் சேக்கிழார் சுவாமிகளுக்கு எளிதாகுமென்றும் தேவர்க்குக் அரிது என்றும் திட்டவட்டமாக உமாபதி சிவாச்சாரியார்கூறியுள்ளார். பொய்யைக் காட்டும் ஜீவக சிந்தாமணிக் கதையின் பொருளில்சொக்கிப்போன அநபாய சோழனின் வேண்டுகோளின்படி சிவ கதைகளாகிய சிவ தொண்டர்களின் கதைகளை மந்திர வடிவமான தெய்வச் செய்யுட்களில் அமைத்துக் காட்டி யுள்ளார். முதல்மந்திரி உத்தியோகம் வகித்த தெய்வ சேக்கிழார்சுவாமிகள்,

[ செ. சின்னத்துரை
இளைப்பாறிய ஆசிரியர் ]
(வளரும்)

## ஏழாலை மேற்கு ஐ. நா. சங்க நிலையத் திறப்பு விழா

—o—

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் மடாலயத்தின் அபிமுகத்தில் அமைந்துள்ள மேற்படி சங்க நிலையத் திறப்பு விழா 26-5-75 திங்கட்கிழமை பிற்பகல் 6 மணி யளவிற் கொண்டாடப்பட்டது. 44 ஆண்டுகள் 16-3-31 தொடக்கம இச்சங்கம் செவ்வனே இயங்கிவருதல் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் திரு சி. காசலிங்கம அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகைதர முடியாமற் போயிற்று—ஆசிமொழிகள் கூற அழைக்கப்பட்டுவந்த தேசிய பேரவை உறுப்பினர் திரு வி. தருமலிங்கம் அவர்கள் கோயிலின் அபிமுகத்தில் அமைந்த

## கதிர்காமத்திற்குப் பாத யாத்திரை

26-5-75 வற்ருப்பளைப் பொங்கலைமுடித்துக்கொண்டு ஈராயிரம் அடியார்கள்வரை பாத யாத்திரை செய்கின்ருர்கள். வற்ருப்பளை, தண்ணிருற்று, மாமூலை, கணுக்கேே, குமுளமுனை, செம்மலை ஆகிய இடங்கள்சென்று முருகன், பிள்ளையார் ஆகிய தெய்வங்களை வழிபட்டுக் கொண்டு யாத்திரை தொடர்ந்து நிகழ்கின்றது. பாதயாத்திரைக் குழுவில் யாழ்ப்பாணம் நல்லூர், திருமலை மட்டுககர் வவுனியா ஆகிய பல்வேறிடங்களையும் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

(எமது பாத யாத்திரை நிருபர்)

## திருக்கேதீசுவர வரலாறு

தென்னிந்திய ஓதுவார் திரு. பட்டுச்சாமி அவர்கள் எழுதிய திருக்கேதீசுவர வரலாறு ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டத்தால் பிரசுரிக்கப்பெற்று பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் திருக்கேதீசுவரத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு, ச. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் பரமாசாரிய சுவாமிகளால் வெளியீடுசெய்யப்பெற்றது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆய்வுரை வழங்கினர். வித்தியாதிபதி இரா. சிவலிங்கம் சிறப்புரை நிகழ்த்தினர். செயலாளர் திரு. இ. நமசிவாயம் நன்றி கூறினர். —

மேற்படி சங்க நிலையத்தைச் சைவ முறைப்படி திறந்து வைத்தார் சபைத்தலைவர் பண்டிதர் மு. கந்தையா B.A அவர்கள் தலைமை தாங்கி உரை நிகழ்த்திஞரி. திரு. நா. இரத்தினம் அவர்கள் வரவேற்புரையைக் கூறி அறிக்கையும் வாசித்தார். ஆரம்பகாலம் தொடக்கம் அங்கத்தவரன திரு. செ. சின்னத்துரை B. A. அவர்கள் 43 ஆண்டு தாம் தனாதிகாரிகாரியாக கடமையாற்றிய அனுபவம் நிறைந்த அறிக்கையை வாசித்தார். திரு. ம. சுப்பிரமணியம் ஐக்கிய பரிசோதகர் அவர்களும் ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு. சு. அம்பலவாணர் B. A. அவர்களும் வலிகாமம் வடக்கு ஐக்கிய மேற்பார்வை சபைத் தலைவரும் ஏழாலை தெற்கு ஐக்கிய காணய சங்கத்தலைவர் அவர்களும் ஆசி உரை வழங்கினுர்கள். திரு. சி. சண்முகதடிவேல் அவர்கள் நன்றியுரை நவின்றனர்.

உ

## யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை

# சமயபாடப் பரீட்சை. 1974.

### பாடசாலைப் பரிசில்கள்

### 3-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| சக்திவேல் பெருமாள் செட்டியார் | யாழ். வண். நாவலர் மகா வித். |
| கெங்காதரன் இராசலிங்கம் | சுப்பிரமணிய வித். புங்குடுதீவு |
| யுகநாயகி முருகேசு | ஸ்ரீ பாரவதி வித். அரியாலை, யாழ். |
| புஷ்பலதா நடுவில் | நல்லூர் இ. த. க, பாடசாலை |
| மங்சளேஸ்வரி மயில்வாகனம் | யாழ். தட்டாதெரு இ. த, க, பாடசாலை |
| சித்திராதேவி காசிப்பிள்ளை | கந்தர்மடம் சை. பி. வித். யாழ். |

### 4-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| காயத்திரி கங்காதரன் | யாழ். வேம்படி மகளிர் கல்லூரி |
| சுரேஷ் சிவராசரத்தினம் | தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி |
| இராசேஸ்வரி வேலு | யாழ், சன்மார்க்க மகா வித். |
| சிவஅன்பு பீதாம்பரம் | யாழ். பெரியபுலம் மெ. மி. பாடசாலை |
| இராதா சிவஞானம் | யாழ். வண். நாவலர் மகா வித். |
| கல்யாணி குமாரசாமி | சுன்னுகம் இராமநாதன் கல்லூரி |
| முருகானந்தி சிவபாதம் | மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| உஷாதேவி கந்தசாமி | கொடிகாமம் திருநாவுக்கரசு வித். |
| கமலினி இராசரததினம் | கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் கல்லூரி |
| அருணன் பாலசுப்பிரமணியம் | புங்குடுதீவு சுப்பிரமணிய வித். |
| ரவிச்சந்திரன் தம்பிராசா | காரை. சுந்தரமூர்த்தி வித்தியாசாலை |
| ரவி பொன்னு | ஸ்ரீ பார்வதி வித். அரியாலை யாழ். |
| சிவகுமாரி சுப்பிரமணியம் | நல்லூர் இந்து தமிழ்ப் பெண் பாடசாலை |
| கிருபாகான் இராசேந்திரம் | தொண்டமானுறு மகா வித். |
| பாஸ்கரன் சண்முகம் | புதுக்குடியிருப்பு சி. சி. த. க. பாடசாலை |
| சிவகலை தம்பிராசா | மட்டுவில் சாநதநமாகி அ த க. பாடசாலை |
| ரவிச்சந்திரன் மாசிலாமணி | நவாலி சென் பீற்ரேஷ ரோ. க. பாட, |
| செல்லம்மா சின்னப்பொடி | கைதடி எருதிடல் அ. த. த. பாட, |
| சிவகுமார் கனகரத்தினம் | கொக்குவில் மேற்கு சி, சி. த. க. பாட, |
| சிவானுசாந்தன் மூர்த்தி | திருநெல்வேலி இ. த. க, பாடசாலை |
| வரதன சண்முகநாதன் | கைக்குளதெரு சி, சி, த. பெ. பாடசாலை, |
| விஜயரக்சினி நடராசா | ஆனைக்கோட்டை ஸ்ரீ வைத்திலிங்க வித், |
| நேசமலர் சபாரத்தினம் | தட்டாதெரு இ. த. க. பாடசசலை |
| குணானந்தன் பொன்னம்பலம் | உயரப்புலம் மெ. மி. பாடசாலை |
| முரளதரன் கிருஷ்ணர் | பொன்னாலை வாதராஜப்பெருமாள் வித். |
| வள்ளிநாயகி சண்முகநாதன் | கந்தர்மடம் சை. பி. வித். |
| கஜேந்திரா ஆனந்தராசா | வட்டு. திருஞானசம்பந்தர் வித். |

### 5-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| உமா சோமசேகரம்பிள்ளை | யாழ், வேம்படி மகளிர் கல்லூரி |
| ஜெயமலர் காசிப்பிள்ளை | தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி |
| கிருபாலினி செல்லத்துரை | யாழ். சன்மார்க்க மகா வித். |
| சசிகலாதேவி இலட்சுமணராசா | யாழ். பெரியபுலம் மெ. மி. பாட. |
| சாந்தினி சாமிநாதன் | யாழ். வண், நாவலர் மகா வித். |
| சிவானந்தி சோமசுந்தரம் | சுன்னுகம் இராமநாதன் கல்லூரி |
| லலிதாதேவி கிருஷ்ணனந்தம் | வட இந்து மகளிர் கல்லூரி |
| கேதீஸ்வரி குமாரசாமி | மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| கமலேஸ்வரி வாரித்தம்பி | கொடிகாமம் திருநாவுக்கரசு வித். |
| பஞ்சவர்ணம் வேலுவேழார் | கொஸ்லாந்தை தமிழ் மகா வித். |
| உஷா பாலசுப்பிரமணியம் | கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் கல்லூரி |
| கணநாதன் கணபதிப்பிள்ளை | யாழ். இநதுக் கலலூரி |
| பௌடின்மாலா யோகரத்தினம் | மாத்தளை பாக்கிய வித். |
| சத்தியசீலன் இராசரத்தினம் | காரைநகர் சுந்தரமூர்ததி வித். |
| விஜிதா சுப்பிரமணியம் | அரியாலை ஸ்ரீபார்வதி வித். |
| ஹரிதாஸ் இராசதுரை | ஓமந்தை மகாவித், |
| மணிவண்ணன் யாதவராசன | நல்லூர் இந்து த. க. பாட. |
| மங்கையர்ச்செல்வம் செல்லத்துரை | நவாலி சென் பீற்றேஸ் ரோ.க, பாட |
| சுரபி இராசநாயகம் | திருநெல்வேலி இந்து த க. பாட. |
| தயானந்தன் விஜயானந்தன் | நல்லூர் கைக்குள சி, சி. த. பெண் பாட. |
| பத்மராணி செல்லையா | தட்டாதெரு இ த. க. பாட, |
| கணநாதன் பொன்னுத்துரை | கலவெட்டித்திடல் நாகேசுர வித், |
| ஜெயலட்சுமி நாகலிங்கம் | பொன்னாலை வரதராஜப் பெருமாள் வத். |
| சிறசபேசன் அண்ணாமலை | மீசாலை காந்தீய சேவா சங்கம் |
| உமாதேவி தியாகராசா | சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோயில் |

[ சைவசமய அபிவிருத்திக் கழகம்.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 1-6-75.

சி. சிவரத்தினம்,
பரீட்சைக் காரியதரிசி.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஞூ வைகாசி மீ உ௩-உ வெள்ளி

## ஆராய்ச்சி தரும் ஆக்கம்

இவ்வாரம் வெளிவந்த செய்திகளில் மிக முக்கியமானதொன்றுண்டு. திருக்கோணேசுவரத்தைப்பற்றிய சாதனம் தேடி எடுபட்டதே அது.

ஆராய்ந்து பெறும் அரிய உண்மைகள் புராதன வரலாற்றின் பொலிப்பைக் காட்டுவதுமன்றிக் கருமங்கள் சீராயமைவதற்கும் ஐயுறவுகள் தவறான கருத்துக்கள் யாவற்றையும் போக்கி நன் முடிவு கொள்வதற்கும் வழி வகுக்குமல்லமா? விடா முயற்சியின் விளைவு எப்பொழுதும் மேன்மையான செயல்களுக்கு அடிகோலும் என்பதை அநுபவ வாயிலாக நாமெல்லோரும் அறிந்து வருகின்றோம்.

ஆலயங்கள், மடங்கள் முதலிய சமய நிலையங்களின் பழையவரலாற்றை, அவற்றுக்குரிய பொருட்கள் காணிகள் முதலியனவற்றை முன்னோர் எழுதி வைத்த சாதனங்கள் மூலம் அறிந்து, பொதுமக்கள் தெரிந்து கொள்ளக்கூடியவகையில் வெளியிடுவது சாலச்சிறந்த திருப்பணியாகும்.

பழம்பெருங் கோயில்களுக்குரிய காணிகள் பல உத்தரவின்றிப் புறம்பானவர்களால் ஆட்சி செய்யப்பட்டும் உரிமை கோரப்பட்டும் இருக்கின்றன. ஆகவே அக் கோயில்களிலே நித்திய நைமித்தியங்கள் முறைப்படி நிறைவுற முடியாதநிலைமை ஏற்படுகின்றது

தமிழகத்தின் தனிப்பெரும் புகழ், சாதனங்களை எழுதிப் போந்த நமது மூதாதையரின் அருஞ்செயலில் உண்டு. இவற்றைப் பேணிப் பாதுகாத்து உரிய வண்ணம் கருமம் இயற்றாது விட்ட இழுக்கினாலே பரோபகாரிகளாகிய முன்னோரின் எண்ணமும் செயலும் நிறைவேறாதிருக்கும் நிலைமை எழுந்திருப்பது பழியை விளைவிப்பதன்றோ?


எனவே திருக்கோணேசுவரத் திருப்பணியன்பர்கள் அரிதில் முயன்றெடுத்த சாதனத்தின் பெரும் பயனை முன்வைத்து ஏனைய புராதனக் கோயில்களுக்குரிய வரலாறு பொதிந்த கல்வெட்டுப் போன்ற ஆதாரங்களை தேடி எடுப்பதில் நாமெல்லோரும் ஈடுபடுவது தெய்வத்தொண்டாகும் சைவசபைகளின பணியாகும். பொதுமக்களும் இப்புண்ணியப் பணியிற் பங்கு கொண்டு திருக்கோயில்களுக்குரியனவான இப்பொழுது வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் காணியின பொருட்களின் விபரங்களை ஆராய்ந்தறிந்து செய்தித்தாள்கள் வாயிலாக அல்லது சைவ சபைகள் மூலமாக வெளியிடுவது நன்மை பயக்கும் வழியாகும்,

எதற்கும் தொடுத்துமுயலும் பண்பு வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்ற முதுரையை மந்திரமாகக்கொண்டு செயற்படுவோமாக.

---

உ
சிவமயம்

### வள்ளி அம்மை திருக்கலியாணப் படிப்பு



திருவருளை முன்னிட்டு சென்ற ஐந்து மாத காலமாக நடைபெற்றுவருகிற கந்தபுராணபடனத்தின் பூர்த்திப் படிப்பு (வள்ளி அம்மை திருமணப் படலம்) 6-6-75 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் சபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நிகழும்.

சைவபரிபாலன சபை — வை. இரகுநாதமுதலியார்
யாழ்ப்பாணம், 3-6-75. — காரியதரிசி,

---

### நாவலரும் கோயிலும்

[ இக் கட்டுரையைப்பற்றி சில குறிப்புக்களை "இந்திரச்சுடர்" ஆசிரியர் திரு. நா. செல்லப்பா அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இட வசதி யின்மையால் அடுத்த இதழில் வெளி வரும். ப—ர்.

---

## நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
[ எழுதி உதவியவர் சி. சீவரத்தினம் ]

### (2) கோயில் (நல்லூர்)

(முன் வளர்ச்சி — 11)

நாஞ் சென்னபட்டணத்துக்குச் சென்றபின் கோயிற் கட்டடமும் விக்கிரகப் பிரதிட்டை முதலியனவுஞ் செய்துவிடல் வேண்டும் என்று பேசுகின்றார்களாம். நமது தொடக்கம் புகழ்ப் பொருட்டாயினும் ஆகுக; புண்ணியப் பொருட்டாயினும் ஆகுக. எப்படியாயினும், பிறர் சொல்லாலன்றி நஞ் சொல்லாற் பிறந்த நமது கோட்பாடு நிறைவேறிவிட்டாற் புகழும் புண்ணியமும் நமக்குத்தானே. நமக்கு வருத்தமேன்! தங்கள் கருத்து இது என்பதனை நமக்கு நேரே அறிவித்துவிட்டால், நாம் இத்தேசத்தை விரைந்து விட்டகன்றுவிடுவோம். அகன்றுவிட்டால், இங்கே நமது கோட்பாடு நிறைவேறிவிடுதல் ஒரு பயன்; ஏச்சுக் கேளாமை ஒரு பயன்! போகும் வழிகளில் எதிர்ப்படுங் குருலிங்க சங்கமங்களை வழிபடுதல் ஒரு பயன்! அங்கங்குள்ள பெரியோர்களை அடுத்து அவரவரிடத்துள்ள உண்மை நூல்களைக் கையகப் படுத்திக் கொள்ளல் ஒரு பயன்! சென்னபட்டணஞ் சேர்ந்து பல நூல்களையும் உரைகளையுந் திருத்தியும் புதிய நூல்கள் சில செய்தும் உலகத்தாருக்குப் பயன்படும் பொருட்டு அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தல் ஒரு பயன்! பற்றற்ற மெய்ஞ் ஞானிகளுக்கும் வேண்டற் பாலனவேயாகிய அன்ன வஸ்திரங்களுக்கு முட்டற அப் புத்தகங்களால் வரும் ஊதியங்கொண்டு வாழ்தல் ஒரு பயன்: எஞ்சிய ஊதியம் நாம் எடுத்த தருமங்களுக்காயினுஞ் சிவாலயங்களுக்காயினும் பயன்படல் ஒரு பயன்; இவை பல முற்றிய பின்னராயினும் இடையிலாயினுந் தேவாரம் பெற்ற சிவஸ்தலம் யாதேனும் ஒன்றில் இறத்தல் ஒரு பயன் ஆகிய இப் பயனெல்லாம் நமக்கெய்துமே! குறையென்னை!

இவ் வியாழ்ப்பாணத்திலே, நீங்கள் முன்னொருபொழுதுங் காணாத தேவாரத் திருக்கூட்டக் காட்சியும், முன்னொருபொழுதுங் கேளாத தேவாரக் கேள்வியும், முன்னொரு பொழுதும் பெறாத சிவ பத்தியும், போன வருஷத் திருவிழாவிலே உங்களுக்குக் கிடைத்தது நன்மையா? தீமையா? இது நன்மை என்பது சத்தியமேயானால், அத் திருக்கூட்ட வாசத்துக்கும், அதற்குச் செயற்பாலதாயும்,

> மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
> அண்ணலா ரடியார்தமை யமுது செய்வித்தல்
> கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
> உண்மையாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.
>
> — பெரியபுராணம்.

என்னும் திருவிருத்தத்திலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எலும்பைப் பெண்ணாக்கிய திருப்பதிகத்தில் அருளிச்செய்தபடி திருவிழாவோடு முதற்கண் உடனெண்ணப்பட்டதாயும், உள்ள மகேசுர பூசைக்கும் இக் கோயில் தெற்கு வீதி மடம் இடமாயது நன்மையா தீமையா? இது நன்மையென்பது சத்தியமேயானால், ……… இடமாகாது பிறவற்றிற்கே இடமாயிற்றே என்ற பொருமையினாலும், திருவிழா முடிந்த பின்னரும். … … … … … … … அம்மடமுடையார்களையுஞ் சிவனடியார்களையுந் தூஷிக்கவும், காகிதம், விளையாடவுந் தலைப்பட்ட இக் கோயிலார்களை நீங்கள் கண்டியாது விடுவீர்களா? "சிவஞான நூல்களை ஓதல் ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்னும் ஞான யாகஞ் செய்யும் மடாலயத்தைக் கட்டுவித்தவர் பெறும் பலம், கோடி தேவாலயங் கட்டுவித்த பலத்துக்கும், மூவாயிர கோடி யாகஞ் செய்த பலத்துக்குஞ் சமமாகும்" என்பது சிவாகமத் துணிவேயாகவும், இம் மடத்தில் இத் தீமைகள் செய்தவரைச் சுப்பிரமணியக் கடவுள் தண்டியா தொழிவாரா?

( வளரும் )

---

## மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

( முன் வளர்ச்சி )

இனி நேசவருளென்பன அடியார் கடவுள்பாற் கொள்ளுமன்பும் கடவுள் அடியார்பாற் கொள்ளும் அருளுமாம். இவ்விரண்டனையும் இறைவன்றானே செய்து நெஞ்சிற் செய்து பேராது நின்ற பெருங்கருணைப் பேராறென முடியும். புரிந்து, செய்து.

இனி ஒட்டமின்றி நிலையாக நின்ற பேராறெனவு மிசைத்தது காண்க. நேச வருள் : உம்மைத் தொகை.

### ஆரா வமுதே! அளவிலாப் பெம்மானே!

உரை : வானவரு முண்ணாத அமுதமே! ஆற்றல், அருள், இன்ப முதலாய இறைமைப் பண்பொரோ வொன்றும் வரம்பின்றியிருக்கும் பெருமானே! பண்பின் வினை பண்பியின்மேனின்றது. அளவு: காண்டல் கருதன் முதலாய அளவையுமாம்: ஆராமைக்கு எழுவாய் சொல்லெச்சம். இறைவன் யாண்டு மெஞ்ஞான்றுந் தன்மை யொருமை யயாயிருத்தலின் அவனை அவனருளானன்றி அளவைகளானுணர்வது தெளிவுபடாது. பெம்மான்: பெருமானென்பதன் மரூஉ. வானவரு முண்ணாதவமுதென்றது அவரின் மேலாய நீத்தார்தாம் என்ஞான்றுஞ் சாவாது பிறவாது வாழ்தற்பொருட்டும் அன்பர் கழிபேரின்சுவைப் பொருட்டு முண்ணுமமுதென்றவாறு.

### ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே!

உரை : தவத்தின்கணின் றொருமுனைப்பட்டாராய்ந்து தெருளாதவரது நெஞ்சினுள் அவரறியாதவாறு மறைந்திருக்குமொளியாயுள்ளானே! அவர்தம்மைத் தாமறைத்து மறைந்துகொண்டதல்லது இறைவன் மறைதல் எஞ்ஞான்று மெவ்விடத்துமில்லையாதலின் ஒளிக்கும் ஒளியென்றார், இனி ஒளியானென்பதனைப் பெயராக்காது மறைவினைப் பெயராக்கி ஒளிக்கின்ற ஒளியாதானெனவுரைப்பினு மமையும்.

ஓராதார் கடவுள் எங்குமுளனெனினும் எம்முள்ளத்துமிருந்தார்தல் வேண்டுமெனவும் உலகந் தோன்றி நின் றொடுங்குமாறெவ்வாறெனவுந் தெருண்டு ஓர்ந்துணராதார்.

(வளரும்)

---

புண்ணியநாச்சி மட தருமம்

### சேக்கிழார் நாயனார் குருபூசை

மேற்படி குருபூசை சைவ பரிபாலன சபையில் வழமைபோல சிறப்பாகக் கொண்டாடப்படும்,

காலை 9—12 மணி வரை சிவபூசை புராண படனம்,
12.30 மணி மகேசுரபூசை
அகில இலங்கை சேக்கிழார் மன்றத்துடன்

சைவ அன்பர்கள் சமுகமளிப்பார்களாக.

வை. இரகுநாதமுதலியார்
செயலாளர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம் 6-6-75

---

### அகழ்வு ஆராய்ச்சி

திருக்கோணேசுவரத் தலத்துக்கருகாமையில் பிறெடறிக் கோட்டையிலே புதைபொருள் ஆராய்ச்சி பொருத்தமற்றதெனச் சைவ மக்கள் பலகாலும் முறையிட்டனர். இப்பொழுது இந்த ஆராய்ச்சியை அவ்வளவில் நிறுத்துமாறு பிரதமர் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். இது ஒரு நல்ல அறிகுறியாய் அமையும் என்று பொதுமக்கள் எதிர் பார்க்கின்றனர்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
இல 4314

1 வல்லிபுரம் நாகேஸ்வரனும் பெண்
2 பவளராணியும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரி
வழக்காளிகள்

எதிராக

1 முத்து இராமலிங்கமும் பெண்
2 செல்லம்மாவும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரி
எதிராளிகள்

சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தால் 4314-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த ஆணையின் பிரகாரம் கீழ்க்காணும் ஆதன இடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1975-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை ரூபா 3500/-ம் 2-9 1972 தொடக்கம் 25-1-1973 வரைக்கும் ரூபா 2500/-க்கு 10 வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோடடுச் செலவு ரூபா 203-70 சதம் 9-10-73.ல் கோட்டில் கட்டப்பட்ட செலவில் ரூபா 150ம் தீர்வைத் தொகையில் ரூபா 1000/-ம் மேலும் 23-9-1974-ல் கட்டப்பட்ட ரூபா 1000/-ம் தீர்வைத்தொகையில் தவிர்க்கப்பட்டுள்ளது)

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று நுணாவில் இறை வனவில் வளவும மறுபிரிவுகளும் நி. பர 7½ இதில் தெற்குப்பககமாக நி. பர. 5 ஐந்து பரப்புக்கும் எல்லை கிழக்கு சின்னத்துரை பெண் இராசபூபதியினுதனம் வடக்கு இக்காணிக்கு போக்குவரவு செய்வதற்காக விடப்பட்ட ஒழுங்கை முகப்பும் முத்து பெண் இலட்சுமிக்குரிய மிகுதி யாதனமும் மேற்கு நடராசா பெண் சின்னாச்சியினுதனம் தெற்கு சுப்பிரமணியம் நாகலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட காணியடங்கலும் கிழக்கெல்லைக் காணிகுளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப் புரித்தும்.

எஸ். வி. சதாசிவம்
நீதி மன்ற விற்பனவு
ஆணையாளர்.
சாவகச்சேரி, 5-6-75.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

**வழக்கு இலக்கம். M. B 12781**

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி ரோட்
1, தியாகராசா கந்தையா கைம்பெண் பாக்கியம், தனக்காகவும் பராயமற்ற 2ம் 3ம் பெட்டிசகாரருக்கு அடுத்த கிட்டிய சொந்தக்காரரும்
2. கந்தையா இந்திரேஸ்வரனும் 3, கந்தையா யோகேஸ்வரனும் இருவரும் கந்தர்மடம் யாழ்ப்பாணம் —வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் நல்லூர் 1. கந்தையா தங்கவடிவேலும் மனைவி
2. சுபத்திரா தேவியும் —எதிரிகள்

M. B. 12781-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் காணும் ஆதனம் 1975-ஆம் ஹூ யூலாய் (ஆடி) மீ 3-ஆம் திகதி [ 3-7-75 ] வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 4800/- மேலும் இதில் 2500/- ரூபாவுக்கு 6-10-71 தொடககம் 18-12-73 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 636/30 பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோயிற்பற்று நல்லூரிறை "பெரிய பனந்தோட்டம் சுடுகாட்டுபுலமும் புதுவளவும்" நிலப்பரப்பு 3 குளிகள் 17½. இதில் மேற்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பு 2. வீடும் செய் பயிர் வான் பயிர்களும். கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும். சொல்லப்பட்ட கிணற்றுக்கு போய்வர கிழக்கெல்லைக் காணியின் வடக்கு எல்லை நெடுக பாதை உரித்தும், நிலப்பரப்பு 2க்கும் எல்லை கிழக்கு சீதனம்கொடுத்தவாகளாகிய வல்லிபுரம் சுப்பையாவுக்கும், மனைவி சரஸ்வதிக்கும் உரிய மிகுத ஆதனம். வடக்கு வைத்திலிங்கம் வியாகேசனின் உரிமைக்காரர்களுடைய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி சுந்தரத்தின் உரிமைக்காரர்களின் ஆதனம். தெற்கு ஒழுங்கை,

**வி. செ. குட்டிப்பிள்ளை**
"இராச கிரி" கொமிஷனர் & விலைமதிப்பாளர்
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 1-6-75. 24, 6-6-

---

## Commission Sale
## கோட்டுக் கோமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ. இல. 11723.

1. வல்வெட்டி முருகர் கந்தசாமி
2, ,, பெண் செல்வரத்தினம் —வழக்காளிகள்

எதிராளிகள்

1. வல்வெட்டி கதிரிப்பிள்ளை கந்தசாமி
பெண் சிவக்கொழுந்து —எதிராளிகள்

*மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1975-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ஆந் தேதி (30-7-75) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.*

### ஆதன விபரம்

(1) வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, உடுப்பிட்டிக் கோவிற்பற்று, வல்வெட்டியிறை "நாத்தாவளை, வீடு ½ ஷெ தோட்டம் 1 ஷெ நி: பர, 17 இதில 1ம் 2ம் அடைகளில் தெற்குப்பக்கமாக நாங்களும் மறுபேரும் சேர்ந்து பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட கையொழுங்கை நி- பர. ½ நீக்கி மிகுதிக்கும் 3ம் அடைக்கும் கூடிய நி. பர. 19 குளி 1½ இவைகளில் மேற்கரைவாசியில் வடக்கரைவாசிக்கு நி. பர. 4 குளி 13. 7/8 இதில் கிழக்குப் புறமாக ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் குளி 5 7/8 நீக்கி மிகுதிக்கு நி. பர. 4 குளி 8, இதில் தெற்குப்புறமாக நி. பர, 2½ இதில் கிழக்குப்புறமாக நி. பர, 1½ நீககி மிகுதிக்கு தற்காலமாட்சியிலிருக்கும் நி, பர. 2 இதில் தெற்குப் புறமாக நி, பர- ஒன்று இதற்கெல்லை கிழக்கு கந்தையா சிவகுருபெண் மீனாட்சிக்குடையவாதனம், வடக்கு சிற்றம்பலம் பெண் செல்லாச்சிக்குரிய மிகுதி நிலம், மேற்கு துரைசாமி செல்வநாயகம் பெண் சரஸ்வதிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு சபாபதி கைம்பெண் சின்னப்பிள்ளையினுரிமைக் காரருக்குடைய வாதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலும் வடக்கெல்லைக் காணியின் கிழக்கருகாகவும் கிழக்கெல்லைக் காணியின் வடககருகாகவும் ஆறு அடி அகலமான ஒழுங்கைப் பாவிப்புரித்தும் முழுக்காணிக்குள் கிழக்கே இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

கோட்டால் ஏற்கப்பட்டபெறுமதி ரூபா. 3000/–

மேற் குறித்த காணியில் ஒழுங்கைக்காக விடப்பட்ட குளி 5 7/8 இதற்கெல்லை கிழககு கனகசபாபதி பெண் முத்துப்பிள்ளைக்குடையவாதனம், வடககு ஒழுங்கை, மேற்கு கந்தசாமி பெண் சின்னப்பிள்ளைக்குடையவாதனமும், சிவகுரு பெண் மீனாட்சிப்பிள்ளைக்குரிய வாதனமும், தெற்கு சிவகுரு பெண் மீனாட்சிப்பிள்ளைக்குரிய வாதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலைப் பாவிக்குமுரித்தும்-

கோட்டால் ஏற்கப்பட்ட பெறுமதி ரூபா- 675/-

| | | |
|---|---|---|
| (1) | தீர்வைத்தொகை: | ரூபா 1,853 33 |
| (2) | ரூபா 1000/- வட்டி 12 வீதம் 26-2-72 தொடக்கம் 3-7-72 வரை | ரூபா 42 33 |
| (3) | மொத்தத்தொகை 1ம்' 2ம் | ரூபா 1,895 66 |
| (4) | 1க்கும் 2க்கும் முழுவட்டி 4.7-72 தொடக்கம் 4-11-72 வரை 5 வீதம | ரூபா 31 60 |
| | முழுத்தொகை 4-11-72ல் கொடுக்குமதி | ரூபா 1,927 26 |
| (5) | ரூபா 1,895/66க்கு 5 வீதப்படி மேலதிகவட்டி 4-11-72 ல் இருந்து விற்பனவுத் திகதி 13-1.73 வரை | |
| (6) | கோட்டுச் செலவு இன்னும் மதிப்பிடப்படவில்லை, ஆனால் ஒரு பகுதிக்கான செலவு 3-7-72 ல் தீர்க்கப்பட்டது. | ரூபா 125 00 |
| | மிகுதி முழுத்தொகைக்கும் 29-7-75 வரை 5 வீத வட்டியும். | |

**R. S. இராமநாதன் J. P.**
( Commissioner of Sales, Valuer and Auctioneer )
"உமாபதி" கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
நெல்லண்டை ரேட்டு, தும்பளை, ஏல விற்பனையாளரும்,
பருத்தித்துறை, 26-5-1975 21, 6-6

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M. B 9816

1. சந்தியா டோமினிக் லோறன்ஸும்
2. மனைவி சவரி அம்மா இருவரும் கரையூர் யாழ்ப்பாணம் — வழக்காளி

எதிராக

1. யேக்கப் யோஸ்சைப்பும்
2. மனைவி ஆரோக்கியம் இருவரும் 25, மவுன்காமல்ரோட் யாழ்ப்பாணம் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9816 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1975ம் ஹூ ஆடி மீ 7-ம் திகதி (7-7-75) திங்கட்கிழமை முற் பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6,366/-ம் 9-3-68 தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுக்கும் தரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 602/05 சதம். கட்டப்பட்டிருக்கும் பணம் ரூபா 4,750/– அதனுடன்வழக்கு செலவால் 150/—

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை "அரியதுரையன்தறை அல்லது அனுத்தைவளவு" பரப்பு நில லாச்சம் (2) இரண்டு இதில் கிழக்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட நிலப் பரப்பு (1) ஒன்று 1964-ம் ஆண்டு மரசி மாதம் 7-ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா ஏ. லாசறஸ் அவர்களால் 3113-ஆம் இலக்கத்தால் தயாரிக்கப்பட்ட படத்தால் காட்டப்பட்டிருக்கும் துண்டுக் காணியும் கட்டிடங்களும் அவைகளைச் சேர்ந்தவைகளும் வடக்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பக்கும் கொண்டதுமான இவ் ஆதனத்துக்கு எல்லை கிழக்கு செல்லமுத்துவின் ஆதனமும். மற்றவர்களும் வடக்கு சுவாமிநாதன் இரத்தினத்தின் ஆதனமும். மற்றவர்களும் மேற்கு லோப்பு கொஸ்ரீன் கைம்பெண் கிளாரம்மாவின் ஆதனமும் ரோட்டும், தெற்கு இளையதம்பியின் மனைவி மகேஸ்வரியினதும் S. அந்தோனிப்பிள்ளையினதும் ஆதனம். இதில் அடங்கியவைகளில்உள்ள எல்லா உரிமைகளையும் சேர்ந்தவைகளையும் சேர்ந்த இது முழுவதும்.

**சி. செ. பாலசிங்கம்**
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை 2.6 75.
25. 6-6-75

---

அ. இ. சைவ சித்தாந்த
### எழில் ஞானப் பெரு விழா

சித்திரை 1975

இலங்கை ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனமும் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றமும் இணைந்து நடாத்தும் இவ் விழா இம் மாதம் 21, 22, 23-ம் தேதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் சைவ சித்தாந்தப்பேரறிஞர் திரு. க. வச்சிரவேலு முதலியார் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொள்கின்றூர்கள் என அறியப்படுகின்றது.

---

### ஓலைச் சார்வுகள்

தொழில் முன்னிலைப் பாடத்திட்டத்தின் கீழ் பன்ன வேலை கற்பிக்கும் பாடசாலைகளுக்கு பனை ஓலைச் சார்வு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது. பெற விரும்பும் பாடசாலைகள் தகுந்த அத்தாட்சிப் பத்திரங் கொடுத்து யாழ். மில்ற் வைற் தாபனத் தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்;

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிகி கோட்டில்

இல. 12749

1 கியூபேற் தம்பு ஆனந்தராசா
2 பெண் ஸ்தெலா செல்லம்மா கரவெட்டி கிழக்கு
வழக்காளிகள்

எதிராக

1 கதிரவேலு செல்லையா
2 வல்லிபுரம சபாரட்ணம்
3 பெண் பாய்க்கியம்
4 செல்லையா கந்தசாமி
5 செல்லையா மகள் பாறுபதி
6 செல்லையா மகன் சின்னமணி
7 வயிரமுத்து திரவியநாயகம்
8 பெண் அருந்தவநாயகி
9 வயிரமுத்து கந்தசாமி
10 பெண் அன்னலட்சுமி துன்னாலை தெற்கு
11 ஆறுமுகம் வேலுப்பிள்ளை கரவெட்டி கிழக்கு

வீரசுந்தரமுதலி குறிச்சியிறையிலுள்ள தம்பியாவளை நிர. 5½ என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஹூ ஆனி மீ 24 9-00 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
த. மகேந்திரன்
பதிவாளர்
1975-ம் ஆ வைகாசி மீ 29
வ செல்லையா
வழக்காளியின் சட்டத்தரணி
29. 6-6

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல. 12719

1 ஆள்வார் செல்லத்துரை
2 பெண் யோகம் கரவேட்டி மேற்கு வழக்காளிகள்

எதிராக

1 வீரன் கணபதி
2 கந்தன் கணபதி கரவெட்டி கிழக்கு
3 கந்தன் சிதம்பரன்
4 வேலன் வீரன் கரவெட்டி மேற்கு
5 வேலன் ஆழ்வான் கரவெட்டி கிழக்கு
6 சிலம்பன் முருகன் கைம்பெண் சிவகாமி கரவெட்டி மேற்கு
7 சம்மந்தர் மகள் சின்னப்பிள்ளை குருக்கள் குடியிருப்பு
8 கதிர்காமர் சின்னத்துரை
9 பெண் தெய்வானை கரவெட்டி மேற்கு

வென்றிக் குறிச்சி இறையிலுள்ள தாளன்குளி நிர 10 என்னும் ஆதனத்தை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஹூ ஆடி மீ 3 உ 9.00 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்:

கோட்டாரின் கட்டளைப்படி
த. மகேந்திரன்
பதிவாளர்
1975-ம் ஹூ வைகாசி மீ 29 உ
வ. செல்லையா
வழக்காளியின் சட்டத்தரணி
28. 6-6

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல. 12329

1 கணபதிப்பிள்ளை கந்தப்புவும்
2 பெண் சின்னம்மாவும் — கரவெட்டி வடக்கு
வழக்காளிகள்

எதிராக

1 தேவசகாயம் மயிக்கேல் இராசா கரவெட்டி வடக்கு
2 தம்பு வீரகத்தி கரவெட்டி மேற்கு
3 ஜயாத்துரை இராசன் கைம்பெண் மகேசு
4 வேலன் வல்லி வேலன்
5 வேலன் சின்னவன்
6 வேலன் சின்னப்பொடியன்
7 பெண் குஞ்சுப்பிள்ளை
8 வல்லி கந்தன் ஐயன்
9 வேலையன் வயிரவன்
10 கறுவல் மாணிக்கன் கரவெட்டி மேற்கு
11 வல்லி செல்லன்
எதிரிகள்

கரவெட்டி குறுலிக் குறிச்சி இறையிலுள்ள உழுதம்பி நி. பர, 9 5/8 ஷதோட்டம் 1 என்னும் ஆதனம 1951-ம்ஆ 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற் கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம ஹூ ஆனி 30 உ மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்,

கோட்டாரின் கட்டளைப்படி
த. மகேந்திரன்
பதிவாளர்
1975-ம் ஹூ வைகாசி மீ 29 உ
வ. செல்லையா
வழக்காளியின் சட்டத்தரணி
27, 6-6

### THOUGHTS TO BE TREASURED

அருளல்லது இல்லை அரன், அவனன்றி
அருளில்லை. ஆதலினால் ஓர் உயிர்க்குத்
தருகின்றபோது இருகைத் தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடும் தானே.

God and Grace (Love) are inseparable. When a living being is born, the hand of God and Love, as that of foster-mothers, is manifest.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

**Hindu Organ**

FRIDAY, JUNE 6, 1975

## Appropriate Use of Alcohol

Science is being both blamed and blessed Atomic energy as atrociously used in World War II and in the way it is being proclaimed as a threat by Atomic Powers against the rest of the world, comes in for condemnation. But when its potentialities are made available for purposes of productive and economic prosperity, praises are freely expressed.

Alcohol on the other hand has always been considered as an article of anti-spiritual nature that tends to destroy the human element in man. The danger that is lurking behind this devilish spirit has almost eaten into the body politic as a canker.

However, refreshing reports from Europe state that like atomic energy the alcoholic spirit can be advantageously used for the benefit of mankind. West German Scientists perhaps in their frustration that the Arab nations have undermined the political power of the Western Nations by making the oil of the Middle East rare to others, have of necessity explored the possibility of extracting energy to supplement the availability of petrol and are reported to be optimistic about striking oil in that spirit called alcohol

This venture will be universally acclaimed for the simple reason that the misuse of alcohol by man may be reduced to some extent. At the same time the common man will feel relieved that his motor vehicle can run at a cheaper cost.

## Vandalism with a Vengeance

Mischief makers there are; but the vandals who had brought disgrace to the fair name of Yalpanam by wilfully and maliciously destroying the symbols of remembrance that were erected at the Esplanade in honour of the eleven innocent persons who sacrificed their precious lives in tragic circumstances on the final day of the I. A. T. R. Conference held on January 10, 1974 stand out as specimens of the worst offenders — Why should Tamilaham be subjected to such a state of misery.

## University Campuses

(S. SIVASUBRAMANIAM(

The establishment of two additional Campuses of the University of Sri Lanka, one in the South and one in the East, has, I believe, been part of the policy of the Government. The Parliamentary Opposition, to the best of my knowledge, has not expressed disagreement. The people have also expressed their keen desire to have these two Campuses. It is, on the whole, a very desirable and necessary requirement for the country.

Leaders of all religions during the ages have emphasised the supreme virtue of the possession of knowledge. Statesmen in all parts of the world have also held the view that the money spent on Education and in a special manner on Higher Education would constitute one of the best investments for a nation.

In ancient Sri Lanka, Educational Institutions like the one founded by Sri Rahula of revered memory was considered to be on a par with Universities of the West—

( To be continued )

## About Our Journals

(Continued from last issue)

Mr. A. Sabapathy has been now connected with the "Hindu Organ" either as joint Editor or sole-Editor for the last 24 years. The Editor of the Hindu Organ has been now, for the last three years, very ably and efficiently assisted by Mr. S Sivagurunathan, the assistant Editor, who makes the work of the Editor light. He has been a valued contributor to the columns of this paper from its early days

The Hindu Organ was started on the 11th September 1889 as a fortnightly Anglo-Tamil Newspaper, converted in to an English weekly on 5th July 1899 with a separate fortnightly Tamil edition, enlarged in size and form on 11th July 1906, and published biweekly from 10th July 1913 with the weekly Tamil edition":—TheHindu Organ Silver Jubilee Number—1914.

### PARTITION NOTICE

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

No 12956

1 Subramaniam Kanesu and

2 wife Leelathevi both of Alvai South, Alvai

Vs. Plaintiffs

1. Ramu Arumugam, 2. Ramu Nallathamby both of do, 3. Walliammai widow of Vallipuram of Karaveddy North. 4. Arumugam Thanabalasingham, 5. wife Sellapackiam, 6. Vallipuram Subramaniam, 7. wife Annaledchumy, 8. Vallipuram Subramaniam, 9. Sinnathurai Sathanandan, 10. wife Parameswary, 11. Arumugam Chinniah, 12. Kathirippillai Kathiravelu, 13. wife Saraswathy, 14. Ponniah Kanapathippillai, 15. wife Nagammah, 16. Packiam daughter of Kandiah, 17. Kandiah Samivelu, 18 Wallippillai widow of Kandiah, 19. Nallathamby Nadarajah, 20. Sangarapillai Rajaratnam, 21. wife Nesamalar, 22 Asaippillai Kandasamy, 23. Somasundaram Vivekanandan, 24. Kandiah Chelliah, 25 wife Rasammah, 26. Arumugam Ponnudurai, 27 wife Ratnam, 28. Kandiah Thambiaiyah, 29. wife Puvaneswary, 30. Kandiah Sandrasegaram and 31. wife Saraswathy, 32 Ponniah Thillainathan, 33, wife Annaletchumy, 34. Ramu Sivapragasam, 35 Rasaratnam daughter of Kanapathippillai, 36. Kandiah Kanagasabai all of Alvai South

Defendants

It is hereby notified that Action No. 12956 has been instituted in the District Court of Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the Partition/sale of the land called Kumanayina valalai in extent 47 Lms. V. C. and 10 kulies and situated at Alvai Malava rayakurichy, Kaddaively Parish, Vadamaradchy Division, Jaffna District Northern Province.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 20th day of June 1975 at 10 O'clock of the forenoon.

By order of Court
A Thavarajah
for Registrar

Drawn by
M. Velummayilum
Attorney at Law
for Plaintiffs
This 27th day of
May 1975

5, 6

### PARTITION NOTICE

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

No. 12626

Kulagenga daughter of Sathasivam
Thavagenga daughter of Sathasivam, Minors appearing by their Next Friend Thuraisamy Sathasivam of Kamparmalai, Uduppiddy

Vs. Plaintiffs

1 Kandan Sithamparan
2 Village Council of Uduppiddy
3 Theivarany daughter of Rasathurai
4 Rasathurai Sunthharamoorthy
5 Thangarany daughter of Rasathurai
6 Subramaniam Sivasubramaniam
7 Subramaniam Saravanapavananthan
8 Singaravelu Sundarampillai
9 Murugan Ilayavan
10 Murugan Mylan
11 and wife Sinnappillai all of Kamparmalai, Uduppiddy

Defendants

It is hereby notified that action No. 12626 has been instituted in the District Court of Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called Koothambythoddam in extent 49 Lms. V. C. and 14 kulies and situated at Uduppiddy in the Parish of Uduppiddy Vadamaradchy Division, Jaffna District Northern Province.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 17th day of June 1975 at 10 O'clock of the forenoon.

By order of Court
A. Thavarajah
for Registrar.

Drawn by
M. Velummayilum
Attorney-at-Law
for Plaintiffs
This 27th day of
May 1975

6, 6

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday June 6, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM